# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2001 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, சர்வதேச சிறுவர் கடத்தல் சம்பந்தமான குடியியல் அம்சங்கள் சமவாயச் சட்டம்

---

*(2001, ஓகத்து மாதம் 09 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2001, ஓகத்து மாதம் 10 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II** *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

**விலை: ரூபா 18.50** **தபாற் செலவு: ரூபா 5.25**

# 2001 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, சர்வதேச சிறுவர் கடத்தல் சம்பந்தமான குடியியல் அம்சங்கள் சமவாயச் சட்டம்

[2001 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 09 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.— ஓ. 28/98
4534

**1980 ஆம் ஆண்டு ஒற்றோபர் 25 ஆம் திகதி ஹெய்க்கில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச சிறுவர் கடத்தல் சம்பந்தமான குடியியல் அம்சங்கள் மீதான ஹெய்க் சமவாயத்திற்கு பயன்கொடுப்பதற்கும் ; இலங்கையிலிருந்து அல்லது வழமையாக வதிகின்ற அவர்களது நாட்டிலிருந்து தவறான முறையில் அகற்றப்பட்டு குறித்துரைக்கப்பட்ட நாட்டில் ஏதாவதொரு அல்லது இலங்கையில் தடுத்துவைக்கப்பட்ட சிறுவர்களை திருப்பியனுப்புவதற்காக ஏற்பாடு செய்வதற்கும் ; தவறான முறையில் அகற்றப்பட்ட அல்லது தடுத்து வைக்கப்பட்ட சிறுவர்களைத் திருப்பியனுப்புதல் தொடர்பான விண்ணப்பங்களை விசாரிப்பதற்கு மாகாணமொன்றின் மேல்நீதிமன்றத்திற்குள்ள நியாயாதிக்கத்தை விரிவாக்குவதற்கும் ; அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடை நேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

சர்வதேச சிறுவர் கடத்தல் சம்பந்தமான குடியியல் அம்சங்கள் சமவாயம் 1980, ஒற்றோபர் 25 ஆம் திகதி ஹெய்க்கில் ஏற்றுக்கொள்ளப்பட்டதாதலாலும் ; முகவுரை

அத்துடன், இலங்கை மேற்கூறப்பட்ட சமவாயத்தை ஏற்று அங்கீகரித்துள்ளதாதலாலும் ;

அத்துடன், மேற்கூறப்பட்ட சமவாயத்தின் கீழ் இலங்கை அதன் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு இயலச் செய்யும் சட்டரீதியான ஏற்பாட்டைச் செய்வது இது அவசியமானதாதலாலும் ;

ஆகவே இப்பொழுது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்

1. இச்சட்டம், 2001 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, சர்வதேச சிறுவர் கடத்தல் சம்பந்தமான குடியியல் அம்சங்கள் சமவாயச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், 1980, ஒற்றோபர் 25 ஆம் திகதி ஹெய்க்கில் கைச்சாத்திடப்பட்ட

2 - H 010722 - 1150 (2001/02)

(இதனகத்துப்பின்னர் "சமவாயம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சர்வதேச சிறுவர் கடத்தல் சம்பந்தமான குடியியல் அம்சங்கள் சமவாயம் எத்தேதியன்று இலங்கையில் வலுவுக்கு வருகின்றதோ, அத்தேதியாக வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

விண்ணப்பம்.

**2.** வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் எந்த நாடுகள் தொடர்பாக ஏற்புடையனவாதல் வேண்டுமோ அந்நாடுகளையும் அத்தகைய ஏற்பாடுகள் எத்தேதியன்று அவ்வாறு பயனுற வேண்டுமோ அத்திகதியையும் குறித்துரைக்கலாம். இப்பிரிவின்கீழ் எந்நாடு தொடர்பாக கட்டளையொன்று ஆக்கப்பட்டுள்ளதோ அந்நாடு இதனகத்துப்பின்னர் "குறித்துரைக்கப்பட்ட நாடொன்று" எனக் குறிப்பீடு செய்யப்படும்.

தவறான முறையில் அகற்றல் அல்லது தடுத்து வைத்தல்.

**3.** (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, சிறுவரொருவரை இலங்கைக்கு அகற்றல் அல்லது இலங்கையில் தடுத்துவைத்தல் பின்வரும் நிலைமைகளில் முறைகேடானதாகக் கருதப்படல் வேண்டும் :—

(அ) விடயத்திற்கேற்றவாறு அகற்றலுக்கு அல்லது தடுத்துவைத்தலுக்கு உடன்முன்னர் அந்தச் சிறுவரின் வழமையான வதிவிடம் எந்தக் குறித்துரைக்கப்பட்ட நாட்டிலிருந்ததோ அந்த நாட்டின் சட்டத்தின்கீழ், எவரேனும் ஆளுக்கு அல்லது ஏதேனும் நிறுவனத்துக்கு அல்லது வேறு குழுவுக்கு கூட்டாகவோ அல்லது தனித்தோ ஏற்றிக் கூறிய கட்டுக்காப்பு உரிமைகளை, விடயத்திற்கேற்றவாறு அத்தகைய அகற்றல் அல்லது தடுத்துவைத்தலை மீறுகின்றதாக இருக்குமிடத்து ;

(ஆ) விடயத்துக்கேற்றவாறு அத்தகைய அகற்றல் அல்லது தடுத்துவைத்தல் இல்லாதிருப்பின், விடயத்துக்கேற்ப அகற்றிய அல்லது தடுத்துவைத்த நேரத்தில் அத்தகைய உரிமைகள் கூட்டாகவோ அல்லது, தனித்தோ அத்தகைய ஆளினால், நிறுவனத்தினால் அல்லது வேறு குழுவினால் உள்ளபடி பயன்

பிரயோகிக்கப்படுமிடத்து அல்லது அத்தகைய ஆளினால், குழுவினால் அல்லது நிறுவனத்தினால் பிரயோகிக்கப்பட்டிருக்கக்கூடியவிடத்து.

(2) விடயத்திற்கேற்றவாறு அத்தகைய அகற்றலுக்கு அல்லது தடுத்துவைத்தலுக்கு உடன்முன்னர், எந்தக் குறித்துரைக்கப்பட்ட நாட்டில் சிறுவரானவர் அவரது வழமையான வதிவிடத்தைக் கொண்டுள்ளாரோ அந்நாட்டின் —

(அ) சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் ;

(ஆ) நீதிமுறையான அல்லது நிருவாக ரீதியான முடிவொன்றின் காரணமாக ; அல்லது

(இ) இச்சட்டத்தின்கீழ் சட்டப்பயன் கொண்ட ஏதேனும் உடன்படிக்கையின் காரணமாக ;

எழுகின்ற கட்டுக்காவல் உரிமைகளை, ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கட்டுக்காவல் உரிமைகளை உள்ளடக்கும்.

4. நீதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் அமைச்சுச் செயலாளர் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக மத்திய அதிகாரியாக இருத்தல் வேண்டும். (இவர் இதனகத்துப் பின்னர் "மத்திய அதிகாரி" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்.) மத்திய அதிகாரி.

5. மத்திய அதிகாரியானவர், நேரடியாகவோ அல்லது இடையாளரொருவரினூடாகவோ பின்வருவன தொடர்பாக பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கலாம், — மத்திய அதிகாரியின் கடமைகள்.

(அ) தவறான முறையில் இலங்கைக்கு எடுத்துச் செல்லப்பட்ட அல்லது இலங்கையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் சிறுவரிருக்கும் இடத்தைக் கண்டறிதல்;

(ஆ) அத்தகைய சிறுவரெவருக்கும் மேலதிக தீங்கேற்படுவதை அல்லது ஏனைய அக்கறையுடைய திறத்தவர்கள் எவருக்கும் பங்கமேற்படுத்துவதை, அவசியமானதெனக் காணக்கூடியவாறான அத்தகைய தற்காலிக் நடவடிக்கைகளை எடுப்பதன்மூலம் அல்லது எடுக்கச் செய்வித்தல் மூலம், தடை செய்தல்;

(இ) எந்தக் குறித்துரைக்கப்பட்ட நாட்டில் அத்தகைய எவரேனும் சிறுவர் அவருடைய வழமையான வதிவிடத்தைக் கொண்டிருந்தாரோ அந்தக் குறித்துரைக்கப்பட்ட நாட்டுக்கு தன்னிச்சையாகத் திரும்புதலை அல்லது அத்தகைய சிறுவர் இலங்கைக்குத் தவறான முறையில் எடுத்துச் செல்லப்பட்டதாக அல்லது இலங்கையில் தடுத்துவைத்திருப்பதாக உரிமைகோரும் ஆளுக்கும், அத்தகைய சிறுவர் அவருடைய வழமையான வதிவிடத்தை எக்குறித்துரைக்கப்பட்ட நாட்டில் கொண்டிருக்கின்றாரோ அந்தக் குறித்துரைக்கப்பட்ட நாட்டுக்குத் திரும்புதலை எதிர்க்கும் ஆளுக்கு மிடையிலான வேறுபாடுகளைச் சிநேகபூர்வமாக தீர்த்துவைப்பதனை உறுதிப்படுத்தல்;

(ஈ) குறித்துரைக்கப்பட்ட நாடொன்றின் தோதான அதிகாரிகளுடன், அத்தகைய எவரேனும் சிறுவர் தொடர்பான தகவலை, விரும்பப்படற்பாலதான விடத்து, பரிமாறிக் கொள்ளுதல் ;

(உ) குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் நாட்டில் சமவாயத்தை அமுலாக்குதல் தொடர்பாக இலங்கை யிலுள்ள சட்டம் பற்றிய பொதுப்பண்பிலான தகவலை வேண்டிக்கொண்டதன் பேரில் வழங்குதல்;

(ஊ) அத்தகைய எவரேனும் சிறுவர் அவருடைய வழமையான வதிவிடத்தை எக்குறித்துரைக்கப்பட்ட நாட்டில் கொண்டிருந்தாரோ அக்குறித்துரைக் கப்பட்ட நாட்டுக்குத் திரும்பிச் செல்வதற்கான நோக்கொன்றுடன் நீதிமுறையான நடவடிக்கைகளை தொடர்வதற்கும் அத்துடன் தோதான விடயங்களில், இலங்கையிலுள்ள சிறுவரொருவரை அணுகு வதற்கான உரிமைகளின் பயனுள்ள பிரயோகத்தை ஒழுங்குபடுத்துதற்கும் அல்லது உறுதிப்படுத்து வதற்கும் அல்லது உறுதிப்படுத்துவதற்காக நீதிமுறையான நடவடிக்கைகளைத் தொடருவதற்கு மான ஒழுங்குகளைச் செய்வதற்கும் ;

(எ) சந்தர்ப்பம் அவ்வாறு தேவைப்படுத்துமிடத்து, சட்ட உதவிக்கான அல்லது ஆலோசனைக்கான ஏற்பாட்டுக்கு வசதி செய்தல் ;

(ஏ) அத்தகைய சிறுவரெவரும் அவருடைய வழமையான வதிவிடம் எக்குறித்துரைக்கப்பட்ட நாட்டிலுள்ளதோ அக்குறித்துரைக்கப்பட்ட நாட்டுக்குப் பாதுகாப்பாகத் திரும்புவதற்கு, அவசியமாகக்கூடியவாறானவையும், தோதானவையுமான நிருவாக ஒழுங்குகளை வழங்குதல்.

தவறான முறையில் அகற்றிச் செல்லப்பட்ட அல்லது தடுத்து வைக்கப்பட்ட சிறுவரொருவர் திரும்புவதில் உதவுவதற்காக மத்திய அதிகாரிக்கான விண்ணப்பம்.

**6.** (1) கட்டுக்காவல் உரிமைகளை மீறும் வகையில் சிறுவரொருவர் தவறான முறையில் இலங்கைக்கு அகற்றப்பட்டுள்ளார், அங்கு தடுத்துவைக்கப்பட்டுள்ளார் என உரிமைகோரும் குறித்துரைக்கப்பட்ட நாடொன்றிற் தோதான அதிகாரி அல்லது ஆளொருவர், நிறுவனம் அல்லது வேறு குழு அத்தகைய சிறுவரை திருப்பி ஒப்படைப்பதற்கான உதவிக்காக மத்திய அதிகாரிக்கு விண்ணப்பிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்படும் ஒவ்வொரு விண்ணப்பமும், பொருளளவில் இச்சட்டத்திற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்தில் இருத்தல் வேண்டுமென்பதுடன், அவற்றுடன் ஏனையவற்றுடன் பின்வருவனவற்றையும் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) விண்ணப்பகாரரின், சிறுவரின், சிறுவரை அகற்றிச் சென்றதாக அல்லது தடுத்துவைத்ததாகச் சார்த்தப்பட்டுள்ள ஆளின் அடையாளம் தொடர்பான தகவல் ;

(ஆ) கிடைக்கக்கூடியதாக இருக்குமிடத்து, சிறுவரின் பிறந்த திகதி ;

(இ) சிறுவரைத் திருப்பி ஒப்படைப்பதற்கான விண்ணப்பதாரரின் உரிமைக்கோரிக்கை எந்த ஏதுக்களை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றதோ அந்த ஏதுக்கள் ;

(ஈ) சிறுவரின் இருப்பிடம் அத்துடன் எவ்வாளுடன் சிறுவர் இருப்பாரென ஊகிக்கப்படுகின்றதோ அவ்வாளின் அடையாளம் என்பன தொடர்பான கிடைக்கக்கூடிய தகவல்கள் அனைத்தும்.

அத்துடன் பின்வருவன விண்ணப்பத்துடன் இணைக்கப்படலாம் —

(i) எக்கட்டுக்காப்பு உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக உரிமைக் கோரிக்கை விடப்பட்டுள்ளதோ, அக்கட்டுக்காப்பு உரிமைகளைக் கொடுக்கும் ஏதேனும் இயைபான முடிவின் அல்லது உடன்படிக்கையின் பிரதியென்று முறையாக அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று ;

(ii) அச்சிறுவர் அவரது வழமையான வதிவிடத்தை எக்குறித்துரைக்கப்பட்ட நாட்டில் கொண்டிருக்கிறாரோ அக்குறித்துரைக்கப்பட்ட நாட்டின் தோதான அதிகாரியிடமிருந்து அல்லது தகைமைபெற்ற ஆள் ஒருவரிடமிருந்து எக்கட்டுக்காப்பு உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகச் சார்த்தப்பட்டுள்ளனவோ அக்கட்டுக்காப்பு உரிமைகள் தொடர்பான குறித்துரைக்கப்பட்ட நாட்டின் சட்டத்தைக் குறிப்பிடும் சான்றிதழொன்று அல்லது சத்தியக்கடதாசியொன்று ;

(iii) ஏதேனும் இயைபான ஆவணம்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழான ஒவ்வொரு விண்ணப்பமும் அத்துடன் அத்தகைய விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டிக்கும் ஆவணங்களும் சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஆன மொழிபெயர்ப்பைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*மத்திய அதிகாரி விண்ணப்பத்தை மறுக்கலாம்.*

7. மத்திய அதிகாரி, 6 ஆம் பிரிவின்கீழ் அவருக்குச் செய்யப்பட்ட ஒரு விண்ணப்பத்தை, அப்படிச் செய்வதற்கான ஏதுக்கள் ஏதுமில்லை எனத் திருப்திப்பட்டால், ஏற்றுக்கொள்ள மறுக்கலாம். விண்ணப்பமொன்றை ஏற்றுக்கொள்ள அவர் மறுக்கும்போது, மத்திய அதிகாரி மறுப்பிற்கான காரணங்களை, விண்ணப்பம் செய்யும் தோதான அதிகாரிக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

*மத்திய அதிகாரி சில குறிப்பிட்ட விடயங்களில் வேறொரு குறித்துரைக்கப் பட்ட நாட்டின் தோதான அதிகாரிக்கு விண்ணப்பத்தை அனுப்புதல்.*

8. ஆறாம் அல்லது 7 ஆம் பிரிவுகளின்கீழ் விண்ணப்பமொன்றைப் பெற்றுக் கொண்டதன்மேல், விண்ணப்பமானது, எச்சிறுவர் தொடர்பாகச் செய்யப்பட்டுள்ளதோ அச்சிறுவர் வேறொரு குறித்துரைக்கப்பட்ட நாட்டிலிருப்பதாக நம்புவதற்கு மத்திய அதிகாரியிடம் காரணமிருக்குமிடத்து, மத்திய அதிகாரி, அக்குறித்துரைக்கப்பட்ட நாட்டின் தோதான அதிகாரிக்கு விண்ணப்பத்தை உடனடியாக அனுப்பிவைத்தல் வேண்டுமென்பதுடன், அவர் அவ்வாறு செய்துள்ளாரென விண்ணப்பம் செய்யும் தோதான அதிகாரிக்கு அறிவித்தலும் வேண்டும்.

*மத்திய அதிகாரி, திருப்பியனுப்பு வதற்கான கட்டளைக்காக மேல்நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம்.*

9. (1) ஆறாம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பமொன்று எச்சிறுவர் தொடர்பாகச் செய்யப்பட்டதோ அச்சிறுவரொருவரைத் திருப்பியனுப்புவதற்கான வேறெவையேனும் வழிகளுக்குப் பங்கமின்றி, அத்தகைய சிறுவரை, அவரின் வழமையான வதிவிடம் எக்குறித்துரைக்கப்பட்ட நாட்டிலிருக்கின்றதோ அந்நாட்டுக்குத் திருப்பியனுப்பக் கட்டளையிடும் கட்டளையொன்றுக்கு மத்திய அதிகாரி, அரசியலமைப்பின் 154ஒ ஆம் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட மேல் மாகாணத்திற்கான மேல் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

(2) ஒராம் உட்பிரிவின் கீழான ஒவ்வொரு விண்ணப்பமும், சுருக்கமுறை நடவடிக்கை முறைமூலம் இருத்தல் வேண்டுமென்பதுடன் 1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைச் சட்டத்தின் கீழான ஏதேனும் முத்திரைத் தீர்வைக் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்பட்டிருத்தலும் வேண்டும்.

*மேல்நீதிமன்றமானது சிறுவரைத் திருப்பினுப்பு வதற்குக் கட்டளையிடலாம்.*

10. மேல் நீதிமன்றமானது, 9ஆம் பிரிவின்கீழ் அதற்குச் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின்மீது, ஆனால் 11 ஆம் பிரிவிற்கமைவாக —

(அ) எந்தச் சிறுவர் தொடர்பாக விண்ணப்பம் செய்யப்பட்டிருக்கின்றதோ அச்சிறுவர் 3 ஆம் பிரிவின் கருத்தெல்லைக்குள் விடயத்திற்கேற்றவாறு தவறான முறையில் இலங்கைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அல்லது இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளாரென ; அத்துடன்

(ஆ) விடயத்திற்கேற்றவாறு சார்த்தப்பட்ட அகற்றிச் செல்லல் அல்லது தடுத்துவைத்தல் திகதிக்கும், அத்தகைய விண்ணப்பத் திகதிக்குமிடையில் ஒரு வருடத்திற்குக் குறைந்ததொரு காலம் கழிந்துவிட்டதென,

திருப்திப்படுகின்றவிடத்து அச்சிறுவர் அவரின் வழமையான வதிவிடத்தை எக்குறித்துரைக்கப்பட்ட நாட்டில் கொண்டிருக்கின்றாரோ அக்குறித்துரைக்கப்பட்ட நாட்டிற்கு அத்தகைய சிறுவரைத் திருப்பியனுப்புவதற்கு உடனடியாகக் கட்டளையிடுதல் வேண்டும் ;

ஆயின் மேல்நீதிமன்றமானது, அச்சிறுவர் அவரது புதிய சூழலுக்கு இயைய வாழப்பழகிக் கொண்டாரெனத் திருப்திப்பட்டாலன்றி, விடயத்திற்கேற்றவாறு சார்த்தப்பட்ட அகற்றிச் செல்லல் அல்லது தடுத்துவைத்தல் திகதிக்கும், விண்ணப்பத் திகதிக்குமிடையிலான காலப்பகுதியில் ஒருவருடத்திற்குமேல் கழிந்துவிடுமிடத்து, அவ்விடயத்தில்கூட அச்சிறுவர் அவரது வழமையான வதிவிடம் எந்தக் குறித்துரைக்கப்பட்ட நாட்டிலுள்ளதோ அக்குறித்துரைக்கப்பட்ட நாட்டிற்கு திருப்பியனுப்பும் கட்டளையை ஆக்கலாம்.

மேல் நீதிமன்றம் 10 ஆம் பிரிவின் கீழான கட்டளை யொன்றைச் செய்வதற்கு மறுப்பதற்கான ஏதுக்கள்.

11. (1) சிறுவரொருவரை, அவரது வழமையான வதிவிடம் எக்குறித்துரைக்கப்பட்ட நாட்டிலுள்ளதோ அக்குறித்துரைக்கப்பட்ட நாட்டுக்குத் திருப்பியனுப்புதலை எதிர்க்கின்ற ஆள் அல்லது குழு —

(அ) சிறுவரைக் கவனித்துவரும் ஆள், நிறுவனம் அல்லது வேறு குழு விடயத்திற்கேற்றவாறு அகற்றிச் செல்லலின் அல்லது தடுத்துவைத்தலின்போது, அத்தகைய கட்டுக்காப்பு உரிமைகளைப் பிரயோகித்துக் கொண்டிருக்கவில்லையென அல்லது

விடயத்திற் கேற்றவாறு அத்தகைய அகற்றிச்செல்லலுக்கு அல்லது தடுத்து வைத்தலுக்குச் சம்மதம் அளித்திருந்தவரென அல்லது அத்தகைய அகற்றிச்செல்லலை அல்லது தடுத்து வைத்தலைத் தொடர்ந்து அதை ஏற்றுக்கொண்டாரென ; அல்லது

(ஆ) அச்சிறுவரைத் திருப்பியனுப்புதல் சிறுவரை உடல் அல்லது உளரீதியான தீங்குக்கு வழிவகுக்கும் அல்லது வேறுவகையில் சிறுவரைச் சகிக்க முடியாததொரு நிலைமைக்குட்படுத்தும் என,

மேல் நீதிமன்றத்தைத் திருப்திப்படுத்தினால், நீதிமன்றமானது, அச்சிறுவரை, அத்தகைய குறித்துரைக்கப்பட்ட நாட்டுக்குத் திருப்பியனுப்புதலுக்கு 10 ஆம் பிரிவின்கீழ் கட்டளையொன்றை ஆக்குவதற்கு மறுக்கலாம்.

(2) திருப்பியனுப்புதலை சிறுவர் ஆட்சேபித்தால், அத்துடன் சிறுவரின் கருத்துக்களைக் கவனத்திற்கெடுப்பதற்குத் தோதான முதிர்ச்சி வயதொன்றை அடைந்துள்ளதுடன் பக்குவத் தரத்தையும் பெற்றுள்ளார் என்று, மேல்நீதிமன்றம் திருப்திப்பட்டால், அச்சிறுவர் அவரது வழமையான வதிவிடம் எக்குறித்துரைக்கப்பட்ட நாட்டிலுள்ளதோ அக்குறித்துரைக்கப்பட்ட நாட்டுக்குத் திருப்பியனுப்புவதற்கான 10 ஆம் பிரிவின்கீழான கட்டளையொன்றை ஆக்குவதற்கு நீதிமன்றம் மறுக்கலாம்.

(3) மேல்நீதிமன்றமானது, (1) ஆம் அல்லது (2) ஆம் உப பிரிவின்கீழ் அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையில், அச்சிறுவர் அவரது வழமையான வதிவிடம் எக்குறித்துரைக்கப்பட்ட நாட்டிலுள்ளதோ அக்குறித் துரைக்கப்பட்ட நாட்டின் தோதான அதிகாரியினால் வழங்கப்பட்ட சிறுவரின் சமூகப் பின்னணிகளுடன் தொடர்புறும் ஏதேனும் தகவலைக் கவனத்திற்கெடுத்தல் வேண்டும்.

(4) மேல்நீதிமன்றமானது, சிறுவரின் கட்டுக்காவலுடன் தொடர்புறும் இலங்கை நீதிமன்றமொன்றின் முடிவொன்று அல்லது இலங்கை நீதிமன்றமொன்றினால் அங்கீகரிக்

கப்படுவதற்குரித்துடைய முடிவொன்று, வலுவிலிருக்கிறது என்ற ஏதுவின் மீது மாத்திரமே, அச்சிறுவரை அவரது வழமையான வதிவிடம் எக்குறித்துரைக்கப்பட்ட நாட்டிலுள்ளதோ அக்குறித்துரைக்கப்பட்ட நாட்டிற்கு திருப்பியனுப்புதலுக்கான 10 ஆம் பிரிவின்கீழான கட்டளையொன்றை ஆக்குவதற்கு மறுத்தல் ஆகாது. ஆனால் மேல்நீதிமன்றமானது 10 ஆம் பிரிவின்கீழ் கட்டளையொன்றை ஆக்குவதில் அத்தகைய முடிவுக்கான காரணங்களைக் கவனத்திற்கெடுத்தல் வேண்டும்.

*மத்திய அதிகாரி விண்ணப்பத்தைக் கையுதிர்ப்பதில் ஏற்பட்ட தாமதத்திற்கான காரணங்களை நீதிமன்றத்திலிருந்து கோரலாம்.*

**12.** (1) மேல் நீதிமன்றமானது, 9 ஆம் பிரிவின்கீழ் சிறுவரொருவரைத் திருப்பியனுப்புதலுக்காக நீதிமன்றத்திற்குச் செய்யப்படும் விண்ணப்பமொன்றை விண்ணப்பத் திகதியிலிருந்து ஆறுவாரத்திற்குள், கையுதிர்க்கத் தவறும் பட்சத்தில், மத்திய அதிகாரி —

(அ) தனது சொந்தப் பிரேரணை மீது ; அல்லது

(ஆ) அச்சிறுவர் அவரது வழமையான வதிவிடத்தைக் கொண்டிருக்கும் குறித்துரைக்கப்பட்ட நாட்டின் தோதான அதிகாரியின் வேண்டுகோளின்பேரில்,

தாமதத்திற்கான காரணங்களை மேல் நீதிமன்றத்திடமிருந்து கோரலாம்.

(2) மத்திய அதிகாரி, (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவரினால் செய்யப்பட்ட வேண்டுகோளொன்றின்மீது பதிலொன்றைப் பெறுமிடத்து அத்தகைய பதிலை, அச்சிறுவர் அவரது வழமையான வதிவிடம் எக்குறித்துரைக்கப்பட்ட நாட்டிலுள்ளதோ அக்குறித்துரைக்கப்பட்ட நாட்டின் தோதான அதிகாரிக்கு அனுப்பச் செய்வித்தல் வேண்டும்.

*அணுகுவதற்கான உரிமைகள்.*

**13.** (1) விண்ணப்பத்தில் குறித்துரைக்கப்பட்ட ஆளொருவர் இலங்கையிலுள்ள சிறுவரொருவரை அணுகுவதற்கான உரிமைகளைப் பயனுறத்தக்கவிதமாகப் பிரயோகிப்பதற்கு உதவுவதற்காக, குறித்துரைக்கப்பட்ட நாடொன்றின் தோதான அதிகாரி அல்லது ஆளொருவர், நிறுவனம் அல்லது வேறு குழு, மத்திய அதிகாரிக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பமொன்று ஏனையவற்றுடன் பின்வருவனவற்றையும் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) விண்ணப்பகாரரின் சிறுவரின் அத்துடன் இலங்கையில் சிறுவர் எவ்வாளின் கட்டுக்காவலிலுள்ளாரோ அவ்வாளின் ஆளடையாளம் தொடர்பான தகவல் ;

(ஆ) கிடைக்கக்கூடியதாக இருக்குமிடத்து சிறுவரின் பிறந்த திகதி ;

(இ) அணுகுவதற்கான விண்ணப்பகாரரின் உரிமைக் கோரிக்கை எந்த ஏதுக்களை அடிப்படையாகக் கொண்டுள்ளதோ அந்த ஏதுக்கள் ; அத்துடன்

(ஈ) சிறுவரின் இருப்பிடம் அத்துடன் எவ் ஆளுடன் இருப்பார் என ஊகிக்கப்படுகின்றதோ அவ் ஆளின் அடையாளம் என்பன தொடர்பான கிடைக்கக்கூடிய தகவல்கள் அனைத்தும் ;

அத்துடன் பின்வருவன விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் –

(i) சிறுவரை அணுகுவதற்கான உரிமையைக் கொடுக்கும் இயைபான நீதிமன்ற முடிவின் அல்லது உடன்படிக்கையின் உண்மையான பிரதியொன்று முறையாக அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று ;

(ii) அச்சிறுவர் அவரது வழமையான வதிவிடத்தை எக்குறித்துரைக்கப்பட்ட நாட்டில் கொண்டிருக்கிறாரோ அக்குறித்துரைக்கப்பட்ட நாட்டின் தோதான அதிகாரியிடமிருந்து அல்லது தகுதிவாய்ந்த ஆள் ஒருவரிடமிருந்து, விண்ணப்பகாரரினால் உரிமைகோரப்படும் உரிமைகளுடன் தொடர்புள்ளவையான, அக்குறித்துரைக்கப்பட்ட நாட்டின் சட்டத்தைக் குறிப்பிடுகின்ற, சான்றிதழொன்று அல்லது சத்தியக் கூற்று ஒன்று.

(3) ஓராம் உட்பிரிவின்கீழான ஒவ்வொரு விண்ணப்பமும் அத்துடன் அத்தகைய விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் ஆவணங்களும் சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஆனமொழிபெயர்ப்பைக் கொண்டிருத்தல் வேண்டும்.

மத்திய அதிகாரி அணுகுவதற்கான கட்டளைக்காக நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம்

**14.** (1) இலங்கையிலுள்ள சிறுவரொருவரை அணுகுவதற்கான எவரேனும் ஆளின் உரிமைகளைப் பிரயோகிப்பதற்கான வேறு எவையேனும் வழிகளுக்குப் பங்கமேற்படாத வகையில், மத்திய அதிகாரியானவர், மேல் மாகாணத்திற்கென, அரசியலமைப்பின் யாப்பின் 154(ஞ) ஆம் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட, மேல் நீதிமன்றத்திற்கு அவ் உரிமைகளின் பயனுறுத்தக்க பிரயோகத்துக்கான நீதிமன்றக் கட்டளையொன்றுக்காக விண்ணப்பிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான ஒவ்வொரு விண்ணப்பமும் சுருக்கமுறை நடவடிக்கைமுறைமூலம் இருத்தல் வேண்டுமென்பதுடன், 1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைச் சட்டத்தின்கீழான ஏதேனும் முத்திரைத் தீர்வைக் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்பட்டிருத்தலும் வேண்டும்.

(3) மேல் நீதிமன்றமானது (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதற்குச் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றிலிருந்து அவ்விண்ணப்பமானது எவ்வாளினால் அல்லது எவ்வாள் சார்பில் செய்யப்பட்டதோ அவ்வாளினால் விண்ணப்பத்தில் குறித்துரைக்கப்பட்ட சிறுவரை அணுகுவதற்கான உரிமையொன்றைக் கொண்டுள்ளார் எனத் திருப்திப்பட்டவிடத்து அத்தகைய அணுகுவதற்கான உரிமைகளின் பயனுறுத்தக்க பிரயோகத்துக்கு அவசியமானவாறான அத்தகைய கட்டளைகளையும், அக்கட்டளைகள் எந்நிபந்தனைகளுக்கு அமைய இருக்கின்றனவோ அந்நிபந்தனைகள் எவற்றையேனும் ஆக்கலாம்.

சான்று

**15.** (1) சிறுவரொருவர் தொடர்பில் 6 ஆம் அல்லது 13 ஆம் பிரிவின்கீழ் மத்திய அதிகாரிக்குச் செய்யப்படும் விண்ணப்பமும் அத்தகைய விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் எல்லா ஆவணங்களும், விடயத்திற்கேற்றவாறு அச்சிறுவரைத் திருப்பியனுப்பலுக்காக அல்லது சிறுவரை அணுகுவதற்காக, விடயத்

திறகேற்றவாறாக 9 ஆம் அல்லது 14 ஆம் பிரிவின்கீழான அத்தகைய விண்ணப்பத்தின் விசாரணையில், கையொப்பம் பற்றிய எண்பிப்பில்லாது சான்றாக ஏற்கப்படற்பாலதானதாதல் வேண்டுமென்பதுடன், அதற்கு முரணானது எண்பிக்கப்படும் வரை, அதன்கண் கூறப்பட்ட நிகழ்வுகளின் எண்பிப்பாக இருத்தலும் வேண்டும்.

(2) மூன்றாம் பிரிவின் பொருளுக்குட்பட சிறுவரொருவர் இலங்கைக்கு அகற்றப்படுதல் அல்லது அங்கு தடுத்துவைத்தல் தவறான முறையிலானதா என்பதைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காக, 9 ஆம் பிரிவின்கீழ் சிறுவரைத் திருப்பியனுப்புதலுக்காக செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின் விசாரணையில், மேல்நீதிமன்றமானது, அச்சிறுவர் அவரின் வழமையான வதிவிடம் எக்குறித்துரைக்கப்பட்ட நாட்டிலுள்ளதோ அக்குறித்துரைக்கப்பட்ட நாட்டின் இயைபான சட்டத்தையும் நீதிமுறை முடிபுகளையும் நீதி நெறிக் கவனத்துக்குட்படுத்தலாம்.

16. மேல்நீதிமன்றமானது, 10 ஆம் பிரிவின்கீழ், சிறுவரொருவரை அச்சிறுவர் அவரின் வதிவிடம் எக்குறித்துரைக்கப்பட்ட நாட்டிலுள்ளதோ அக்குறித்துரைக்கப்பட்ட நாட்டுக்குத் திருப்பியனுப்புதலுக்கான கட்டளையொன்றை ஆக்குவதற்கு முன்னர், சமவாயத்தின் பொருளுக்குட்பட அச்சிறுவர் இலங்கைக்கு அகற்றப்படுதல் அல்லது அங்கு தடுத்துவைத்தல் தவறான முறையிலானதா என்ற முடிவொன்றை அல்லது தீர்மானத்தை அச்சிறுவர் அவரது வழமையான வதிவிடம் எக்குறித்துரைக்கப்பட்ட நாட்டிலுள்ளதோ அக்குறித்துரைக்கப்பட்ட நாட்டின் இயைபான அதிகாரியிடமிருந்து பெறுவதற்காக மத்திய அதிகாரியை வேண்டிக் கொள்ளலாம்.

மேல்நீதிமன்றம் குறித்துரைக்கப்பட்ட நாட்டின் இயைபான அதிகாரிகளிடமிருந்து கட்டளையைப் பெறுவதற்கு மத்திய அதிகாரியைத் தேவைப்படுத்தலாம்.

17. ஒன்பதாம் அல்லது 14 ஆம் பிரிவின்கீழ் ஏதேனும் விண்ணப்பத்திற்கான எவரேனும் எதிர்வாதியினால் உறப்பட்ட அல்லது உறப்படச் சாத்தியமாயுள்ள எவையேனும் செலவுத் தொகைகளைச் செலுத்துவதற்கான பிணைப் பொறுப்பைத் தருமாறு அல்லது அத்தகைய ஏதேனும் விண்ணப்பத்தின் செலவு தொகைகளைச் செலுத்துமாறு மத்திய அதிகாரியைக் கட்டளையிடுவதற்கு இச்சட்டத்தில் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்திலுள்ள எதுவும் மேல்நீதிமன்றத்தை அதிகாரமளிப்பதாகக் கருதப்படுதல் ஆகாது.

மத்திய அதிகாரி செலவு தொகைகளின் கொடுப்பனவுக்கான பிணைப் பொறுப்பை கொடுப்பதற்குத் தேவைப்படுத்தப்படமாட்டார் என்பது.

மேல்நீதிமன்றம் மத்திய அதிகாரியினால் உறப்பட்ட செலவுத் தொகைகளின் கொடுப்பனவுக்குக் கட்டளையிடலாம் என்பது.

**18.** பத்தாம் பிரிவின்கீழ் சிறுவரொருவரை அச்சிறுவர் அவரது வழமையான வதிவிடம் எக்குறித்துரைக்கப்பட்ட நாட்டிலுள்ளதோ அக்குறித்துரைக்கப்பட்ட நாட்டிற்கு திருப்பி யனுப்புவதற்கான கட்டளையொன்றை ஆக்குவதன்மேல், மேல்நீதிமன்றமானது, சிறுவரைக் கண்டுபிடித்தலில் உறப்பட்ட செலவு, மத்திய அதிகாரியின் சட்டப் பிரதிநிதித்துவச் செலவுகள் அத்துடன் அச்சிறுவரை அவரது வழமையான வதிவிடம் எக்குறித்துரைக்கப்பட்ட நாட்டிலுள்ளதோ அக்குறித்துரைக்கப் பட்ட நாட்டிற்குத் திருப்பியனுப்புவதில் உறப்பட்ட செலவுகள் உட்பட, மத்திய அதிகாரியினால் உறப்பட்ட செலவுத் தொகைகளைச் செலுத்துமாறு அச்சிறுவரை இலங்கைக்கு அகற்றிய அல்லது அச்சிறுவரை இலங்கையில் தடுத்துவைத்த ஆளுக்குக் கட்டளையிடலாம்.

10 ஆம் பிரிவின் கீழான கட்டளை குறைநலன்களின் மீதான முடிவொன்றாதல் அல்லது தீர்மானமொன்றாதல் ஆகாது.

**19.** பத்தாம் பிரிவின்கீழ் மேல்நீதிமன்றத்தினால் ஆக்கப்படும் கட்டளையொன்று, கட்டளையானது எச்சிறுவர் தொடர்பானதோ அச்சிறுவரின் கட்டுக்காவலுடன் தொடர்புறும் ஏதேனும் பிரச்சினையில், குறைநலன்களின் மீதான முடிவொன்றாக அல்லது தீர்மானமொன்றாகக் கருதப்படுதல் ஆகாது.

இலங்கைக்குத் தவறான முறையில் அகற்றப்பட்ட சிறுவரொருவரின் கட்டுக்காவலுடன் தொடர்புள்ள பிரச்சினைகளை முடிவெடுக்க அல்லது தீர்மானிக்க நீதிமன்றத்திற்குள்ள நியாயாதிக்கம்.

**20.** சிறுவரொருவர் குறித்துரைக்கப்பட்ட நாடொன்றிலிருந்து இலங்கைக்குத் தவறாக அகற்றப்பட்டுள்ளார் என்ற அறிவித் தலை மத்திய அதிகாரி பெறும்போது அறிவித்தல் எச்சிறு வருடன் தொடர்பானதோ அச்சிறுவரின் கட்டுக்காவலுடன் தொடர்புள்ள குறைநலன்களின் மீதான எந்தப் பிரச்சினையை யும், இலங்கையிலுள்ள எந்த நீதிமன்றமும், —

(அ) மத்திய அதிகாரி அல்லது இலங்கையிலுள்ள நீதிமன்றமொன்று அத்தகைய சிறுவரை குறித் துரைக்கப்பட்ட நாட்டிற்குத் திருப்பியனுப்புவதற்காக, விடயத்திற்கேற்றவாறு 6 ஆம் அல்லது 9 ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றை மறுத்த பின்னர் வரை ; அல்லது

(ஆ) அத்தகைய அறிவித்தல் திகதியிலிருந்து ஆறு வார காலப்பகுதி முடிவடைந்த பின்னர் வரையிலும் அத்தகைன் குறித்துரைக்கப்பட்ட நாட்டுக்கு திருப்பியனுப்ப 6 ஆம் பிரிவின்கீழ் விண்ணப்ப மெதுவும் அக்காலப் பகுதியில் செய்யப்படாதுள்ள போதும்,

முடிவெடுத்தலோ, தீர்மானித்தலோ ஆகாது.

**21.** சிறுவரொருவரை அவரது வழமையான வதிவிடம் எக்குறித்துரைக்கப்பட்ட நாட்டிலுள்ளதோ அக்குறித்துரைக்கப்பட்ட நாட்டிற்குத் திருப்பியனுப்புவதற்காக 10 ஆம் பிரிவின்கீழ் கட்டளையொன்று ஆக்கப்படுமிடத்து, மத்திய அதிகாரி அத்தகைய குறித்துரைக்கப்பட்ட நாட்டிற்கு அத்தகைய சிறுவரைத் திருப்பியனுப்புவதற்கான கட்டளையொன்றுடன் இணங்கியொழுகுவதற்கு அவசியமானவாறான அத்தகைய ஒழுங்குகளைச் செய்வித்தல் வேண்டும்.

மத்திய அதிகாரி, 10ஆம் பிரிவின் கீழ் எச்சிறுவர் தொடர்பில் கட்டளையொன்று ஆக்கப்பட்டுள்ளதோ அச்சிறுவரை திருப்பியனுப்புவதற்காக ஒழுங்கு செய்தல்.

**22.** (1) ஆளொருவரின் நிறுவனத்தின் அல்லது வேறு குழுவின் கட்டுக்காவல் உரிமைகளை மீறிச் சிறுவரொருவர் குறித்துரைக்கப்பட்ட நாடொன்றிற்குத் தவறான முறையில் அகற்றப்பட்டுள்ளார் அல்லது குறித்துரைக்கப்பட்ட நாடொன்றில் தவறான முறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார் என இலங்கையில் உரிமைக் கோரிக்கை செய்யும் அத்தகைய ஆள், நிறுவனம் அல்லது வேறு குழு அச்சிறுவர் இலங்கைக்குத் திரும்புவதில் உதவுவதற்காக மத்திய அதிகாரிக்கு விண்ணப்பிக்கலாம்.

ஆள், நிறுவனம் அல்லது வேறு குழு குறித்துரைக்கப்பட்ட நாடொன்றிற்கு தவறான முறையில் அகற்றப்பட்ட அல்லது அங்கு தவறாக தடுத்து வைக்கப் பட்ட சிறுவர் திரும்புவதற்காக மத்திய அதிகாரிக்கு விண்ணப்பிக்கலாம்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பமொன்று கிடைக்கப்பெற்றதன்மீது, சிறுவர் இலங்கைக்குத் திரும்புவதில் உதவுவதற்காக அத்தகைய சிறுவர் எக்குறித்துரைக்கப்பட்ட நாட்டுக்கு அகற்றப்பட்டுள்ளார் என அல்லது எக்குறித்துரைக்கப்பட்ட நாட்டில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார் என சார்த்தப்பட்டுள்ளதோ அக்குறித்துரைக்கப்பட்ட நாட்டின் தோதான அதிகாரிக்குத் தோதான முறையில் மத்திய அதிகாரி விண்ணப்பித்தல் வேண்டும்.

(3) ஒராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட "கட்டுக்காவல் உரிமைகள்" என்பன :—

(அ) இலங்கையின் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் ; அல்லது

(ஆ) இலங்கை நீதிமன்றமொன்றின் அல்லது நியாய சபையொன்றின் தீர்ப்பொன்றின் அல்லது கட்டளை யொன்றின் காரணமாக ; அல்லது

(இ) இலங்கைச் சட்டத்தின்கீழ் சட்டப்பயன் கொண்ட ஏதேனும் உடன்படிக்கையின் காரணமாக,

எவரேனும் ஆளுக்கு நிறுவனத்துக்கு அல்லது வேறு குழுவுக்கு வந்து சேருகின்ற கட்டுக்காவல் உரிமைகளையும் உள்ளடக்கும்.

குறித்த சில பிரகடனங்களைச் செய்வதற்கு மேல்நீதிமன்றத்துக்குள்ள நியாயாதிக்கம்.

**23.** அரசியலமைப்பின் 154(ஞ) என்னும் உறுப்புரையின்மூலம் தாபிக்கப்பட்ட மேல் மாகாணத்திற்கான மேல்நீதிமன்றமானது, குறித்துரைக்கப்பட்ட நாடொன்றின் தோதான அதிகாரியினால் அல்லது அவர் சார்பில் செய்யப்பட்ட விண்ணப்ப மொன்றின்மீது, சிறுவரொருவரை அக்குறித்துரைக்கப்பட்ட நாட்டிற்கு அகற்றுதல் அல்லது அக்குறித்துரைக்கப்பட்ட நாட்டில் அச்சிறுவர் தடுத்துவைக்கப்பட்டிருத்தல் சமவாயத்தின் 3 ஆம் உறுப்புரையின் பொருளுக்குட்பட தவறானது என வெளிப்படுத்தலாம்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**24.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பொருள்கோடல்.

**25.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலன்றி —

(1) 'சிறுவர்' என்பது பதினாறு வயதை அடையாத ஆளொருவர் என்று பொருள்படும்.

"அணுகுவதற்கான உரிமைகள்" என்பது சிறுவர் ஒருவர் தொடர்பாக சிறுவரின் வழமையான

வதிவிடம் தவிர்ந்த வேறோர் இடத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட காலப்பகுதியொன்றிற்கு சிறுவரொருவரை அகற்றுவதற்கான உரிமையையும் உள்ளடக்கும்.

"கட்டுக்காவல் உரிமைகள்" என்பது, சிறுவர் ஒருவர் தொடர்பாக சிறுவரின் உடல் மீதான கவனிப்புடன் தொடர்பான உரிமைகளையும் அத்துடன் குறிப்பாக சிறுவரது வழமையான வதிவிடத்தைத் தீர்மானிப்பதற்குரிய உரிமையையும் உள்ளடக்கும்.

(2) குறித்துரைக்கப்பட்ட நாடொன்றின் வெவ்வேறான ஆட்புலக்கூறுகளில் ஏற்புடையதாகும் இரண்டு அல்லது அதிகமான சட்டமுறைமைகளைச் சிறுவரின் கட்டுக்காவல் விடயங்கள் தொடர்பாக அந்நாடு கொண்டிருக்குமிடத்து —

(அ) இச்சட்டத்தில் "குறித்துரைக்கப்பட்ட நாடொன்றிலுள்ள வழமையான வதிவிடம்" என்ற குறிப்பீடு, அக்குறித்துரைக்கப்பட்ட நாட்டின் ஆட்புலக்கூறின் வழமையான வதிவிடம் என்பது பற்றிய குறிப்பீடு என்றாற்போன்று வாசித்துப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தில் "சிறுவர் எக்குறித்துரைக்கப்பட்ட நாட்டில் அவரது வழமையான வதிவிடத்தைக் கொண்டுள்ளாரோ அக்குறித்துரைக்கப்பட்ட நாட்டின் சட்டம்" என்ற குறிப்பீடு அச்சிறுவர் எக்குறித்துரைக்கப்பட்ட நாட்டில் அவரது வழமையான வதிவிடத்தைக் கொண்டுள்ளாரோ அக்குறித்துரைக்கப்பட்ட நாட்டின் ஆட்புலக்கூறின் சட்டம் என்பதுபற்றிய குறிப்பீடு என்றாற்போன்று வாசித்துப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) குறித்துரைக்கப்பட்ட நாடொன்றில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சட்டமுறைமைகள், சிறுவர்களின் கட்டுக்காவல் தொடர்பில் வெவ்வேறு வகையினரான ஆட்களுக்கு ஏற்புடையதாக இருக்குமிடத்து, இச்சட்டத்திலுள்ள "அக்குறித்துரைக்கப்பட்ட நாட்டுக்கான சட்டம்" என்பது பற்றிய குறிப்பீடு, ஏற்புடைத்தான சட்டமுறைமை என்பது பற்றிய குறிப்பீடாக வாசித்துப் பொருள்கொள்ளப்படல் வேண்டும்.

## அட்டவணை

(6 (2) ஆம் பிரிவு)

விண்ணப்பப்படிவம்

வேண்டுகோள் விடுக்கும் மத்திய அதிகாரி அல்லது விண்ணப்பகாரர். வேண்டுகோள் விடுக்கின்ற அதிகாரி.

.............................. ஆம் திகதி பதினாறு வயதடையும் பின்வரும் சிறுவர் தொடர்பானவை ..............................

1. சிறுவரினதும் அதனது பெற்றோரினதும் ஆளடையாளம்.

1 சிறுவர்

| | |
|---|---|
| பெயரும் முதற்பெயரும் | .............................. |
| பிறந்த திகதியும் இடமும் | .............................. |
| அகற்றுதலுக்கு அல்லது தடுத்துவைத்தலுக்கு முன்னர் வழமையான வதிவிடம் | .............................. |
| கடவுச்சீட்டு அல்லது அடையாள அட்டை இலக்கம் ஏதேனும் இருப்பின் | .............................. .............................. |
| விவரணமும் நிழற்படமும் சாத்தியமாகவிருப்பின் | .............................. |

2 பெற்றோர்

| | |
|---|---|
| 2.1 தாய் : பெயரும் முதற்பெயரும் | .............................. |
| பிறந்த இடமும் திகதியும் | .............................. |
| தேசியம் | .............................. |
| தொழில் | .............................. |
| வழமையான வதிவிடம் | .............................. |
| கடவுச்சீட்டு அல்லது அடையாள அட்டை இல. ஏதேனும் இருப்பின் | .............................. |
| 2.2 தந்தை : பெயரும் முதற்பெயரும் | .............................. |
| பிறந்த திகதியும் இடமும் | .............................. |
| தேசியம் | .............................. |
| தொழில் | .............................. |
| வழமையான வதிவிடம் | .............................. |
| கடவுச்சீட்டு அல்லது அடையாள அட்டை இல. ஏதேனும் இருப்பின் | .............................. |
| 2.3 திருமணத் திகதியும் இடமும் | .............................. |

ii வேண்டுகோள் விடுக்கும் தனியாள் அல்லது நிறுவனம் (அகற்றுதலுக்கு அல்லது தடுத்துவைத்தலுக்கு முன்னர் உண்மையில் கட்டுக்காவலைப் பிரயோகித்தவர்)

3 பெயரும் முதற்பெயர்களும் ..............................
தனியாள் விண்ணப்பகாரரின் தேசியம் ..............................
தனியாள் விண்ணப்பகாரரின் தொழில் ..............................
முகவரி ..............................
கடவுச்சீட்டு அல்லது அடையாள அட்டை
இல. ஏதேனும் இருப்பின் ..............................
சிறுவருக்கு என்ன உறவுமுறை ..............................
சட்ட ஆலோசகரின் பெயரும்
முகவரியும் ஏதேனும் இருப்பின் ..............................

iii சிறுவர் இருப்பதாகக் கருதப்படும் இடம்

4.1 சிறுவரை அகற்றியிருப்பதாக அல்லது தடுத்துவைத்திருப்பதாகக் குற்றஞ்சாட்டப்படும் ஆள் தொடர்பான தகவல்.

பெயரும் முதற்பெயரும் ..............................
பிறந்த திகதியும் இடமும் ..............................
தெரிந்திருந்தால்.
தேசியம், தெரிந்திருந்தால் ..............................
தொழில் ..............................
இறுதியாக தெரிந்த முகவரி ..............................
கடவுச்சீட்டு அல்லது அடையாள அட்டை
இல. ஏதேனும் இருப்பின் ..............................
விவரணமும் நிழற்படமும் சாத்தியமாகவிருப்பின் ..............
(பின் இணைப்புகளைப் பார்க்க) ..............................

4.2 சிறுவரின் முகவரி ..............................

4.3 சிறுவர் தொடர்பில் மேலதிக தகவலை வழங்குவதற்கு இயலக்கூடியதாக இருக்கும் வேறு ஆட்கள்..............................

iv தவறான அகற்றல் அல்லது தடுத்துவைத்தல் தொடர்பான நேரம், இடம், திகதி மற்றும் சூழ்நிலைகள்.

..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................

v விண்ணப்பகாரரின் உரிமைக்கோரிக்கை எந்த நிகழ்வு அல்லது சட்ட ஏதுக்களின் அடிப்படையில் இருக்கிறது என்பது

..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................

vi நடைபெற்றுக் கொண்டிருக்கும் குடியியல் நடவடிக்கைகள் :

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

vii சிறுவர் திருப்பி அனுப்பப்படவேண்டியிருப்பது :

(அ) பெயரும் முதற்பெயரும் ..............................

பிறந்த திகதியும் இடமும் ..............................

முகவரி ..............................

தொலைபேசி இலக்கம் ..............................

(ஆ) சிறுவரைத் திருப்பி அனுப்புவதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள ஒழுங்குகள் ..............................

viii வேறு குறிப்புகள்

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

ix இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களின் நிரல் *

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

திகதி : ..............................

இடம் : ..............................

வேண்டுகோள் விடுக்கின்ற மத்திய அதிகாரியின் அல்லது விண்ணப்பகாரரின் கையொப்பம் அத்துடன்/ அல்லது அதிகாரமுத்திரை.

..........................................

* உதாரணம் : கட்டுக்காவல் அல்லது அணுகுதல் தொடர்பில் இணையான தீர்ப்பின் அல்லது உடன்படிக்கையின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி ; ஏற்புடையதான சட்டத்தின்படியான சான்றுப்பத்திரம் அல்லது சத்தியக்கடதாசி ; விண்ணப்பகாரரின் சார்பில் செயலாற்றுவதற்கு மத்திய அதிகாரியை தத்துவமளிக்கும் அதிகாரவளிப்புப்பத்திரம்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.